**வறக்காபொலை பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஜுன் 30 ஆந் திகதியன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜுன் 28 ஆந் திகதியன்று சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களினாலான தாக்கங்களைத் தவிர, நிதிசார் கூற்றுக்களில் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வறக்காபொலை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடு மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு ஏற்ப உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) நிதி மற்றும் செயற்பாட்டுக் கூற்றுக்களில் மீண்டுவரும் வருவாய்ச் செலவினம் ரூபா 600,900 அதிகமாக காட்டப்பட்டமையால் செயற்பாட்டு மிகை அதேயளவு அதிகரித்தும் மூலதனப் பெறுவனவு அதேயளவு குறைத்தும் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) எதிர்வரும் ஆண்டுக்கெனப் பெறப்பட்ட தீர்வை வரி வருவாயாகிய ரூபா 300,030 மற்றும் விளம்பரப் பலகை வருவாகிய ரூபா 7,067 என்பன மீளாய்வாண்டினது வருவாயாகக் கணக்கிலிடப்பட்டமையால் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை மற்றும் ஆண்டின் இறுதி நாளுக்கு முன்பு பெறப்பட்ட வருவாயாகிய ரூபா 307,067 என்பன நிதிசார் கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டு முடிவிலான ரூபா 46,350 பெறுமதியுடைய கார்பனிக் உரக் கையிருப்பு இறுதிக் கையிருப்பாகக் கணக்கிலிடப்படாமையால் சொத்துக்களது பெறுமதி அதேயளவு குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட 06 ஏக்கர் 14 பர்ச்சஸ் உடைய 16 காணித் துண்டுகளது பெறுமதி மதிப்பிடப்பட்டுக் கணக்கிலிடப்பட வில்லை.

(உ) முன்னைய ஆண்டில் நன்கொடையாக வழங்கப்பட்ட ரூபா 20,207 பெறுமதியான புத்தகங்கள் கூடுதலாகக் கணக்கிலிடப்பட்டமையைச் சீராக்குவதற்கு 2015/23 ஆம் இலக்க நாட் குறிப்பின் மூலம் ரூபா 95,474 சீராக்கல் செய்யப்பட்டமையால் நூலகப் புத்தகக் கணக்கும் மூலதனப் பயன்பாட்டிற்கான வருவாய்ப் பங்களிப்புக் கணக்கும் ரூபா 75,267 குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஊ) முன்னைய ஆண்டின்போது முற் கொடுப்பனவாகப் பெறப்பட்ட தீர்வை வரி மற்றும் ஏக்கர் வரியாகிய ரூபா 102,267 அந்த ஆண்டினது வருவாயாகக் கணக்கிலிடப்பட்டிருந்ததைத் திருத்துவதற்கு 03 ஆம் இலக்க நாட் குறிப்பின் மூலம் தீர்வை வரிக் கணக்கிலும் திரண்ட நிதியக் கணக்கிலும் ரூபா 138,352 சீராக்கல்

செய்யப்பட்டபோதும், சரியான பெறுமதி ரூபா 130,881 ஆகையால் தீர்வை வரி வருவாய்க் கணக்கில் ரூபா 7,471 அதிகரித்துக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(எ) தீர்வை வரியாக ரூபா 5,997,879 பட்டியலிடப்பட்டபோதும், தீர்வை, வரி வருவாயாக ரூபா 5,800,000 கணக்கிலிடப்பட்டமையால் ரூபா 197,879 குறைத்துக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஏ) தீர்வை வரிக்கான தரகாக மீளாய்வாண்டில் ரூபா 173,956 வழங்கப்பட்டபோதும், அது கணக்கிலிடப்படவில்லை.

(ஐ) சபைக்குக் கிடைக்கப் பெற்ற ரூபா 3,223,220 பெறுமதியான கெப் வண்டி 5 ஆம் இலக்க நாட் குறிப்பின் மூலம் ரூபா 2,323,220 ஆகக் கணக்கிலிடப்பட்டமையால் வாகனங்கள் மற்றும் மூலதனப் பயன்பாட்டிற்கான வருவாய்ப் பங்களிப்புக் கணக்கு என்பன ரூபா 900,000 குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஒ) சிங்கள் டிரம் நில உருளையின் பெறுமதி இயந்திர சாதனத்தின் கீழ் கணக்கிலிடப்படவில்லை.

(ஓ) நூலகப் புத்த நன்கொடையாகிய ரூபா 30,782 மற்றும் கொள்வனவுகள் ரூபா 23,202 ஆகக் கணக்கிலிடப்பட்டிருந்தபோதும், உள்ளவாறு நன்கொடையாகப் பெறப்பட்ட புத்தகங்களது பெறுமதி ரூபா 28,227 மற்றும் கொள்வனவுகள் ரூபா 19,120 என்பதால் நூலகப் புத்தகங்கள் ரூபா 6,637 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஔ) பெற வேண்டிய பொதுக் கழிவறை வாடகையாகிய ரூபா 112,042 மற்றும் இறைச்சிக் கடை வாடகையாகிய ரூபா 5,042 என்பன கணக்கிலிடப்படாமையால் வருவாய்க் கடன்பட்டோர் ரூபா 117,084 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(க) வேலைகளின் பொருட்டு 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 51,990,913 கடன்பட்டோரின் கீழ் காட்டப்படவில்லை.

### 1.3.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டு முடிவில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 12 கணக்கீட்டு விடயங்களது கூட்டுத் தொகை ரூபா 123,851,162 ஆகும். அவற்றுடனொத்த உப பதிவேடுகள்/ அறிக்கைகளின் பிரகாரம் கணக்கு மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 173,820,430 ஆகியமையால் ரூபா 49,969,268 வித்தியாசம் நிலவியது.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

(அ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளது பெறுமதி ரூபா 32,341,462 ஆகும். அதில் ரூபா 23,689,062 ஓராண்டிற்கு மேற்பட்ட பழைமை வாய்ந்ததாகும்.

(ஆ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்கு மீதிகளது பெறுமதி ரூபா 43,980,512 ஆகும். அதில் ரூபா 1,687,754 ஓராண்டிற்கு மேற்பட்ட பழமை வாய்ந்ததாகும்.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

கீழே காணப்படும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நி.பி 189 | 2012 டிசெம்பர் 05 ஆந் திகதி பெறப்பட்ட ரூபா 10,350 பெறுமதியான காசோலைக்குக் கொடுப்பனவு மறுக்கப்பட்டமை தொடர்பாக நடவடிக்கை எடுக்கவில்லை. |
| (ii) 371(2)(இ) | செயல் நிமித்தக் கட்டு நிதியாக 07 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட ரூபா 2,552,602 தீர்த்து வைக்கப்படவில்லை. |
| (ஆ) இலங்கை குடியரசின் தாபன விதிக்கோவை | |
| XXIV அத்தியாயத்தின் 1.6 மற்றும் 4 ஆம் பிரிவுகள் | இடமாற்றத்திற்குள்ளான 08 உத்தியோகத்தர்களிடமிருந்தும் 02 ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்தும் 06 சேவை நீங்கிய உத்தியோகத்தர்களிடமிருந்தும் 1988 முதல் 2015 வரையான காலப்பகுதியின்போது அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடனாகிய ரூபா 485,690 அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (இ) பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சினது செயலாளரின் 2014 டிசெம்பர் 29 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 2 ஆம் பிரிவு | (i) 2014 ஒக்டோபர் 24 இல் உள்ளவாறு 180 நாட்கள் தொடர்ச்சியாகப் பணியாற்றிய ஊழியர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2 ஊழியர்கள் ஒரு நாளேனும் பணி புரியாதும் மற்றும் ஒருவர் 20 நாட்கள் மாத்திரம் 2014 சனவரி 01 முதல் 2014 ஒக்டோபர் 24 வரை பணியாற்றியிருந்த போதும் அவர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்தது.<br><br>(ii) தலைவரது பிரத்தியேக செயலாளர் குறித்த சுற்றறிக்கையில் வகைப்படுத்தப்பட்டவாறு நூலக உதவியாளர் தரம் iii க்கு நியமனஞ் செய்யப்பட முடியாத போதும் 2014 ஒக்டோபர் 24 முதல் அமுலுக்கு வரும் பொருட்டு அவருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்தது. |

### 1.3.5 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

சபையின் பெயரில் பதிவுசெய்யப்படாததும் வீதியும் உரித்தும் உறுதிப்படுத்தப்படாததுமான 08 சொத்துக்களை அபிவிருத்தி செய்வதற்கு சபையின் நிதியத்திலிருந்து ரூபா 1,270,833 பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 10,422,546 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 10,075,413 ஆகியமையால் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேற்றில் ரூபா 347,133 அதிகரிப்பு தென்பட்டது.

### 2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

நிதிப் பெறுபேற்றின் ரூபா 347,133 அதிகரிப்பிற்கு 3 வருவாய்த் தலைப்புகளது அதிகரிப்பும் 4 செலவின விடயங்களது குறைவும் பிரதான காரணிகளாகின.

### 2.3 வருவாய் நிர்வாகம்

#### 2.3.1 வருவாய்ச் சேகரிப்பிலான செயலாற்றல்

செயலாளரால் மீளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலிடப்பட்ட வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் வருமாறு.

**2015.12.31 இல் உள்ளவாறான நிலுவை**

| வருவாயினது தோற்றுவாய் | 2015 சனவரி 01 இல் உள்ளவாறான நிலுவை | 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவையில் அறவீடு | 2015 ஆம் ஆண்டிற்கான பட்டியல் தொகை | ஆண்டிற்கான பட்டியலில் அறவீடு | 2015 சனவரி 01 இல் உள்ளவாறான நிலுவை மீதி | ஆண்டிற்கான பட்டியலிடப்பட்ட தொகையில் நிலுவை | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| தீர்வை வரி | 8,043,196 | 2,793,927 | 7,787,000 | 6,302,104 | 5,249,269 | 1,484,896 | 6,734,165 |
| குத்தகை வாடகை | 2,185,181 | - | 7,045,000 | 5,847,573 | 2,185,181 | 1,197,427 | 3,382,608 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 77,760 | 28,750 | 1,320,000 | 1,550,516 | 49,010 | (230,516) | 181,506 |
| ஏனைய வருவாய் | 28,355,111 | 12,149,510 | 72,203,000 | 54,242,102 | 16,205,601 | 17,960,898 | 34,166,499 |

சபை சமர்ப்பித்திருந்த வருவாய் நிலுவை விபரத்தின் பிரகாரம், மீளாய்வாண்டு முடிவில் தீர்வை வரி, குத்தகை வரி மீதி ரூபா 6,734,165 ஆகும். நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதி ரூபா 8,638,985 ஆகியமையால் ரூபா 1,904,820 வித்தியாசம் நிலவியது.

## 2.3.2 தீர்வை வரி

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158(1)(அ) பிரிவில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், தீர்வை வரி அல்லது ஏக்கர் வரி செலுத்தப்படாதவிடத்து சொத்துத் தடை விதிக்கப்பட்டு விற்பனையின் மூலமேனும் பணம் அறவிடப்பட வேண்டும். எனினும், 5 தீர்வை வரிப் பிரிவுகளின் 7,124 தீர்வை வரிக் கூறுகளில் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த ரூபா 8,187,167 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) தீர்வை வரி மதிப்பீடு 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட வேண்டுமாயினும், 2008 ஆம் ஆண்டினது மதிப்பீட்டின் அடிப்படையிலேயே மீளாய்வாண்டிலும் தீர்வை வரி அறவிடப்பட்டவாறிருந்தது.

(இ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்க சொத்துக்கள் சம்பந்தமாக 25 தீர்வை வரிக் கூறுகளில் நிலவிய நிலுவை மீதி ரூபா 128,367 ஆகும். இதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2.3.3 ஏக்கர் வரி

பிரதேச சபையின் அதிகாரத்துக்குட்பட்ட 572 ஏக்கர் வரிக் கூறுகளில் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த மீதி ரூபா 353,418 ஆகும். அதில் நெடுங் காலமாக நிலவி வரும் ரூபா 47,830 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2.3.4 வினோத வரி

வினோத வரிக் கட்டளைச் சட்டத்தின் 01 ஆம் பிரிவினது 2 ஆம் உப பிரிவுக்கமைய வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் தலைவரால் வெளியிடப்பட்ட 2014 நவெம்பர் 28 ஆந் திகதிய 1952/4 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கமைய விழாவிற்கென வழங்கப்படும் பிரவேசச் சீட்டுக்களில் 25 சதவீதமும் சினிமாக் கொட்டைகளில் வழங்கப்படும் பிரவேசச் சீட்டுக்களில் 7.5 சதவீதமும் வினோத வரியாக அறவிடப்பட வேண்டும். சபையின் அதிகாரத்துக்குட்பட்ட ஒரு சினிமாக் கொட்டகையிலிருந்து வினோத வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. மற்றைய சினிமாக் கொட்டகையில் விற்பனை செய்யப்படும பிரவேசச் சீட்டை வழங்குவதற்கு முன்னரே அதில் முத்திரை பொறிக்கப்பட்டிருக்கவில்லை. சினிமாக் கொட்டகை உரிமையாளரால் வழங்கப்பட்டதாகச் சமர்ப்பிக்கப்பட்ட பிரவேசச் சீட்டு விபரத்தின்படி வரி அறவிடப்படுவதால் அறவிடப்பட வேண்டிய உண்மையான வருவாயைச் சபை இழந்திருந்தது. 2015 ஒக்டோபரில் களியாட்டங்கள் மற்றும் விழாக்களின்போது வளவில் விற்பனை செய்யப்பட்ட பிரவேசச் சீட்டுக்களில் முத்திரை பொறிக்கப்பட வேண்டுமாயினும், அவ்வாறு செய்யப்படவில்லை. பிரசுரிக்கப்பட்ட பிரவேசச் சீட்டுக்களின் எண்ணிக்கை, விற்பனை செய்யப்பட்ட பிரவேசச் சீட்டுக்களின் எண்ணிக்கை மற்றும் அறவிடப்பட வேண்டிய வரி என்பவற்றை உள்ளடக்கிய பதிவேடு ஒன்று பேணப்படாததால் 02 சினிமாக் கொட்டைகளிலிருந்து 2016 மார்ச் 15 இல் உள்ளவாறு ரூபா 177,344 வினோத வரி நிலுவையாக இருந்தது. இதனை அறவிடுவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.3.5 காணி விற்பனை மீதான வரி

(அ) சபரகமுவ மாகாண சபையின் உள்ளூராட்சி ஆணையாளரது 2005 ஜுன் 01 ஆந் திகதிய 2005/04 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 3(V) ஆம் பிரிவின் பிரகாரம் காணி விற்பனையாளர்களுடன் உடன்படிக்கைகளில் ஈடுபட்டிருக்க வில்லை.

(ஆ) இவ்வதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் விற்பனை செய்யப்பட்ட 14 ஏக்கர், 03 றூட், 07 பார்ச்சஸ் காணியினது 07 காணித் துண்டுகளது தற்காலிக மதிப்பீடாக ரூபா

2,218,884 வரி அறவிடப்பட்டிருந்தது. எனினும், குறித்த சுற்றறிக்கையின் 3(V) ஆம் பிரிவின் பிரகாரம் விற்பனைப் பெறுமதி மீதான வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 ஆம் ஆண்டில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் எத்தாவல காணியில் பொது நடவடிக்கைகளுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட காணியின் 10 சதவீத காணியை உரித்துறுதி ஒன்றின் மூலம் சுவீகரித்துக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

### 2.3.6 வியாபார வரி

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 156(1) ஆம் பிரிவுக்கமைய தொழில்களுக்கான நிரல் ஒன்றைத் தயாரித்து மார்ச் 31 ஆந் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ சபையினது செயலாளரிடம் அதனைச் சமர்ப்பிக்க வேண்டுமாயினும், அதற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) வியாபார வரி மற்றும் விற்பனை அனுமதிப் பத்திரங்களுக்கான விண்ணப்பப் படிவங்களைப் பதிவேடு ஒன்றில் பதிவு செய்ய வேண்டும். எனினும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படாததுடன், 09 வகை வியாபாரங்களில் ஈடுபடும் வியாபார நிறுவனங்களுக்கு வர்த்தக அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை சுற்றுலாச் சபை அதிகாரச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஹோட்டல்கள் முன்னைய ஆண்டினது வருவாயில் 1 சதவீதத்தை வரியாகச் செலுத்த வேண்டுமாயினும், கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பிக்காது ஹோட்டல் உரிமையாளர்களால் வழங்கப்பட்ட பெறுவனவு அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு வரி அறவிடப்பட்டிருந்ததுடன், அதுவும் 03 ஆண்டுகளுக்கு ஒரு தடவையே பெறப்பட்டுமிருந்தது.

### 2.3.7 ஏனைய வருவாய்

(அ) சபைக்குச் சொந்தமான ZA-5220 இலக்க பெக்கோ லோடர் இயந்திரம் 2015 ஜுலை 09 தொடக்கம் 28 வரையான காலப்பகுதியின்போது ரூபா 75,620 பெறுமதியான எரி பொருளைப் பயன்படுத்தி 119.9 மீட்டர் மணித்தியாலங்களுக்குப் பயன்படுத்தப்பட்டிருந்தது. சபையின் தீர்மானப்படி, மீட்டர் மணித்தியாலம் ஒன்றுக்கு ரூபா 2,250 வாடகைக் கட்டணமாக அறவிடப்பட வேண்டுமாயினும், எதுவித வருவாயும் பெறப்பட்டிராததுடன், இக்காலப்பகுதியின்போது பெக்கோ லோடர் இயந்திரம் எதற்குப் பயன்படுத்தப்பட்டது எனும் தகவல்களும் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வறக்காபொல பஸ் தரிப்பிடத்திற்கருகே 2014 ஆம் ஆண்டின்போது பொதுக் கழிவறையை நடாத்துவதற்கான கேள்வியைப் பெற்றுக் கொண்ட நபர் உடன்படிக்கை நிபந்தனைகளை மீறியவாறு மாதாந்தக் குத்தகை வாடகையைச் செலுத்தத் தவறியிருந்தார். 2016 மார்ச் 17 ஆந் திகதிய கணக்காய்வுச் சந்தர்ப்பமளவிலும் நிலுவையாக இருந்த குத்தகை வாடகை ரூபா 72,042 ஆகும்.

(இ) 2015 ஜுன் மாதத்தில் சபையால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பின்போது சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் 126 விளம்பரப் பலகைகள் இருப்பது இனங்காணப்பட்டிருந்தது. அதன் பொருட்டு அறவிடப்பட வேண்டிய வரி ரூபா 337,610 ஆகும். 2016 மே 02 ஆந் திகதியளவிலும் அத்தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபைக்குச் சொந்தமான 148/1/பீ இலக்கக் கட்டிடம் 2012 ஆம் ஆண்டின்போது பால் விற்பனைக் கூடமாகப் பயன்படுத்தப்படுவதற்காகக் கேள்விகள் கோரப்பட்டிருந்தன. ரூபா 206,000 குறிப்பிடப்பட்ட அதி கூடிய கூறு விலையைச் சமர்ப்பித்த கேள்விதாரர் கேள்வியை ஏற்றுக் கொள்ளாது அதனைப் புறக்கணித்திருந்தார். இரண்டாவது அதி கூடிய கூறு விலையான ரூபா 175,500 ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய போதும், காரணம் எதுவும் குறிப்பிடப்படாது ரூபா 101,500 கூறு விலையைக் குறிப்பிட்டிருந்த கூறு விலை ஏற்றுக்கொள்ளப்பட்டதன் மூலம் சபைக்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 73,500 ஆகும்.

பால் விற்பனைக் கூடக் கேள்வியைப் பொறுப்பேற்காது நிராகரித்த கேள்விதாரரின் கேள்வி வைப்பாகிய ரூபா 7,500 சபைக்குச் சொந்தமாக்கப்பட வேண்டுமாயினும், 2012 ஒக்டோபர் 9 ஆந் திகதிய 2054 ஆம் இலக்க கொடுப்பனவு உறுதிச் சான்றின் மூலம் அத் தொகை திருப்பியளிக்கப்பட்டிருந்தது.

**2.3.8 வாகனத் தரிப்பிடக் கட்டணம்**

2008 ஆம் ஆண்டில் சட்டமாக்கப்பட்ட உப விதிகளின்படி, வாகனத் தரிப்பிடக் கட்டணம் அறவிடப்படாததுடன், முச்சக்கர வண்டித் தரிப்பிடக் கட்டணம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. முறைப்படி தரிப்பிடம் மற்றும் பதிவு செய்யப்பட்ட வாகனங்களது எண்ணிக்கை என்பன கணிப்பிடப்பட்டுக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் பெறக்கூடியதாகவிருந்த வருவாய் இழப்பிற்குள்ளானது.

**2.3.9 தொலை பேசித் தொடர்புக் கோபுரக் கட்டணம்**

(அ) சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் பொருத்தப்பட்டிருந்த 22 தொலை பேசித் தொடர்புக் கோபுரங்களிலிருந்து செய்முறைக் கட்டணமாகிய ரூபா 519,000 இலங்கை குடியரசின் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/08 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின்படி அறவிடப்படுதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமையால் சபை நிதியம் பெறக் கூடியதாகவிருந்த வருவாய் இழப்பிற்குள்ளானது.

(ஆ) தொலை பேசித் தொடர்புக் கோபுரத்திற்கு 2015 ஆம் ஆண்டின் பொருட்டு அனுமதிப் பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.3.10 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்**

2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றக் கட்டண வருவாய் ரூபா 3,087,034 மற்றும் முத்திரைக் கட்டண வருவாய் ரூபா 11,206,903 என்பனவாகும்.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

(அ) சபரகமுவ மாகாண சபையால் வழங்கப்பட்ட 08 வாகனங்கள் மற்றும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சிலிருந்து பெறப்பட்ட 05 வாகனங்களது உரித்தைப் பிரதேச சபை சுவீகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) தகைமை இல்லாத நபர் ஒருவர் 2015 ஜுலை 06 ஆந் திகதியன்று சேவை உடன்படிக்கையினடிப்படையில் பெக்கோ லோடர் இயக்குநராக ஆட்சேர்க்கப்பட்டிருந்தார்.

(இ) சேவை உடன்படிக்கையின் அடிப்படையில் சேவையில் அமர்த்தப்பட்ட 23 ஊழியர்கள் 2014 ஒக்டோபர் 24 ஆந் திகதி முதல் நிரந்தர மற்றும்

ஓய்வூதியத்துடனான பதவிகளில் நிரந்தரமாக்கப்பட்டிருந்தபோதும், அத்தினம் முதலாக 2014 டிசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கு ரூபா 98,553 ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ரூபா 24,638 ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் சபையின் பங்களிப்பாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

சபைக்குச் சொந்தமாக 03 கழிவறைகள் இருந்தபோதும், அவற்றிற்குக் கேள்விகள் கோரப்பட்டோ அல்லது அவை சபையால் பராமரிக்கப்படுவதற்கோ 2015, 2016 ஆம் ஆண்டுகளில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

(அ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சினது நிதியேற்பாட்டின் மூலம் அமுலாக்கப்பட்ட கிராமத்திற்குக் கிராமம் வீட்டுக்கு வீடு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அல்கம இஹலகம பன்சலைக்கூடாக இஹலகமவிற்குச் செல்லும் வீதியில் பாலத்தை நிர்மாணிப்பதற்கு மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 1,462,290 ஆகும். அதில் ரூபா 296,845 பெறப்பட்டபோதும், வேலை இடை நடுவே கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2014 ஆம் ஆண்டின்போது நிர்மாண வேலைகளுக்குப் பெறப்பட்டிருந்த மூலதன உதவித் தொகை வைப்புக் கணக்கின் மூலம் செலவிடப்பட்டிருந்தது. அதில் 05 செயற்திட்டங்களுக்கெனப் பெறப்பட்ட தொகை ரூபா 6,992,766 ஆகும். அத் தொகையில் ரூபா 5,667,571 மாத்திரமே செலவிடப்பட்டமையால் ரூபா 1,325,195 சேமிப்புக்குள்ளானது.

### 3.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) நோயுற்ற பிரதேச சபை அங்கத்தவர் ஒருவருக்குச் சிகிச்சை வழங்குவதற்காக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132(ஐ) பிரிவில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய குறித்த நிதியேற்பாடு இல்லாதபோதும், பொதுச் சபை அங்கீகாரமின்றி அங்கத்தவரின் மனைவிக்கு ரூபா 100,000 வழங்கப்பட்டதாகக் குறிப்பிட்டு தலைவரால் சபையின் நிதியத்திலிருந்து ரூபா 100,000 பெறப்பட்டிருந்தது.

(ஆ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132(ஓ) பிரிவில் உள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரமின்றி முன் பள்ளி ஆசிரியர் பயிற்சிச் செயலமர்வுக்கு ரூபா 17,379 முன் பள்ளிகளுக்கு வழுக்கும் படகு ஒன்று, மேசை மற்றும் நாற்காலிகளை வழங்குவதற்கென ரூபா 71,000 வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கைக்கும் விழா ஒன்றுக்கும் ரூபா 80,709 கலாசார விழாவிற்கு ரூபா 23,395 என மொத்தமாக ரூபா 192,483 செலவிடப்பட்டிருந்தது.

(இ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132(ஓ) பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக, விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரமின்றி மரணாதாரச் சங்கங்கள், நலன்புரிச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் ஆகியவற்றிற்கு வழங்குவதற்கு ரூபா 116,224 மரணாதாரச் சங்கம் ஒன்றிற்கு நாற்காலிகளை வழங்குவதற்கு ரூபா 999,400 குறைந்த வருவாயீட்டும் குடும்பங்களுக்குக் கூரைத் தகடுகளை வழங்குவதற்கு ரூபா 999,600 2 நலன்புரிச் சங்கங்களுக்கு மற்றும் முன் பள்ளிகளைப் புதுப்பிப்பதற்கு ரூபா 336,416 தனியார் பயிர்க் காணி ஒன்றிற்கு நீர் வழங்குவதற்கு ரூபா 99,490 எனச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஈ) சனாதிபதியின் செயலாளரது 2006 பெப்ரவரி 01 ஆந் திகதிய CSA/1/1/2006 ஆம் இலக்கச் சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக சபரகமுவ மாகாண

சபையின் ஆளுநரது அங்கீகாரமின்றி தலைவரது வெளி நாட்டுப் பயணம் ஒன்றிற்குச் சபையின் நிதியத்திலிருந்து ரூபா 188,016 செலவிடப்பட்டிருந்தது.

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு**

(அ) மீளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட வரவு, செலவுத் திட்டத்தில் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த 49 செலவின விடயங்களது கூட்டுத் தொகை ரூபா 22,938,000 ஆகும். அதில் 100 சதவீதமும் 33 செலவின விடயங்களது ரூபா 20,851,007 கூட்டுத் தொகையில் 50 முதல் 99 சதவீதமும் என மொத்தமாக ரூபா 43,789,007 சபையின் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டிலும் கூடுதலாக 5 செலவின விடயங்களுக்கு ரூபா 9,048,677 செலவழிக்கப்பட்டிருந்தது.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு
(ஈ) வருவாய் நிர்வாகம்